<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள்.29.01.2026</u>

<u>O.S. No.101/2023</u>

<u>வா,சா-2 – திரவிய பெருமாள்</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

இந்த வழக்கின்1, 2 பிரதிகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியும் . 1 ம பிரதி சரசு, 2 ம் பிரதி எழில் அரசு . நான் வாதியின் அக்கா மகன் ஆவேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லிய பட்டறை யாருடையது என்றால் என்னுடைய மாமா குணசேகரன் ஆகும். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் 4 எல்லைகள் தெரியாது. பட்டறை என்பது வழக்கு சொத்து அல்ல என்ற விவரம் எனக்கு தெரியாது. பட்டறை என்ற நிலப்பரப்பு எந்த ஆண்டு எனது மாமா எந்த பத்திரத்தின் மூலம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்திலோ, அதனை சுற்றியுள்ள நிலப்பரப்பிலோ எனக்கு வீடோ , நிலமோ இல்லை என்றால் சரி. என்னுடைய வீட்டின் முகவரி என்றால் தெற்கு தாமரைகுளம். தெரு பெயர் இல்லை. வீட்டிற்கு தனியாக பெயரும் இல்லை. என்னுடைய வீட்டிலிருந்து வழக்கு பட்டிகை சொத்திற்கு சுமார் ½ கீ.மீட்ருக்கு உள்ளாக இருக்கும். இந்த வழக்கின் விவரங்கள் எப்போது தெரியும் என்றால் என்னை சாட்சியத்திற்கு அழைக்கும்போது தெரிந்து கொண்டேன்- நான் சொல்லும் பட்டறை என்பதும் வாதி குடியிருக்கும் வீடு என்பதும் வேறு வேறு என்றால் 2 சொத்துகளும் பக்கம் பக்கமாக உள்ளது. 2 சொத்துகள் வெவ்வெறு சொத்துகள் என்றாலும் சர்வே எண் வேறு என்றாலும் எனக்கு தெரியாது. பட்டறை சொத்து தனி என்றாலும் வாதியின் வீடு தனி சொத்து என்றாலும் சரி.

இந்த வழக்கிற்கு எந்தவிதமான பொருத்தமான சாட்சி இல்லை என்றாலும் , உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் 5 வது பத்தியில் 25 ஆண்டுகளாக பாதை இருப்பதாக சொல்லியுள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் விவரமும், பிரமாண வாக்குமூலத்தில் சொல்லிய பட்டறை சொத்து பற்றி விவரமும் எனக்கு விவரம் தெரியவில்லை என்பதால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கதக்கது.